Regd No. M

குடி அரசு 1



குடரசு 1] திருவாரூர். பெரியார் ஆண்டு 69, தை 22. (4-2-48) புதன்கிழமை [ஒலி 4



உத்தமர் காந்தியின்

உயிரைக் குடித்தவன்

ஓர்

ஹிந்தூ பார்ப்பான்

கட்டிலறை வீரர்!

நா. பாண்டுரங்கன்.

"பட்டுமெத்தையை விரித்துப் போடடி, பன்னீர்த்தெளி, மல்லிகைத்தூவு, ஊதுவத்தியை ஏற்றிவை. ஜன்னி, போடாதே பாவி. கற்கண்டுப் பொடியைத் தூவிக் கலக்கிக்கோ. முகம் என்னடி, இப்படி இருக்கு?"!

"இப்பதானே சோப்போட்டுக் கழுவினேன்."

"இன்னொரு தடவை அலம்பிட்டு, அலமாரியிலே பவுடர் இருக்கு. பூசு, பூசிக்கோ! அவன் வருகிற நேரமாச்சு. அலட்சியமாய் இருக்காதே. தாம்பூலத்தைப்போட்டு உதட்டை சிவப்பாக்கிக்கோ. சிடுசிடுன்னு இருக்காதே. இரிப்புக் காட்டிக்கிட்டே இரு! சில்க் சர்க்கை யைப் போட்டுக்கோடி....."

* * *

"வைரம் பதிச்சச் செயின்! கழுத்திலே போட்டிருக்கான் கண்ணைப் பறிக்குது!"

"என்னத்தைச் சொல்றது உனக்கு? எல்லாம் தீதான், சமத்தா சாதிச்சிக்கிணும்."

"எப்படியாவது எனக்கு அது வேணும். ஆசையா இருக்கு போட்டுக்க."

"அவன் உன் கழுத்தை நெறிப்பதுபோலக் கட்டிக்க வாப்ப, கலகலன்னு சிரிச்சிகிட்டு, அவன் கழுத்திலே இருக்கற செயினைக் கழட்டி, நீ கழுத்திலே போட்டுக்க! காரியம் முடிஞ்சுது.....இன்னைக்கி வாதா னனதுப்பி சொல்லியிருக்கான் .....சிங்காரிப்பை முடிச்சுக்க என் தங்கமல்ல, போடி. போ! சொன்ன படி நடந்துக்கோ!"

உசாபாடல், என்ன, மட்டமாகமாகப் போகிறதே என்று உறுமாதீர். மட்டமாகமட்டுமல்ல, இதைவிடக் கெட்டவார்த்தைகளிலே நடைபெறும். எங்கே, என்பது தான் உங்களுக்கு இவ்வளவு தாழ்மையில் புரிந்திருக்குமே. வேசி விடுகளில்! அந்த நீரழுத்தி, 'ஹீரோயிஸ்' விஜயம் செய்யப் போவதாக இதையெல அறிக்கை விடவேண்டியது தான். அங்கெல்லாம் இதுபோன்ற இன்னும், விதவிதமான உரையாடல்கள் உதிரும்

சிவலிங்கம் அவருடைய பெயர், சிவபக்தர் என்ற சிலாகித்துப் பேசப்படுபவர். கல்லாவிதர். வெல்லம்போல் இருக்கும் அவர் பேச்சு, சொல்லாலேயே ஆளை மடக்கிவிடும் வல்லவர். எல்லாவற்றையும் விடநிறந்த கனவான், என்றெல்லாம், அவரைப்பற்றிப் பேசிக் கொள்வார்கள், பொதுமக்கள். அந்தப் பெரிய நகரத்துக்கே அவர்தான் பணக்காரர் நிகரம். தான்மட்டும் வசிக்கத் தனி பங்களா ஒன்று கிறுவியிருக்கிறார். அங்கேதான் அவர் அடிக்கடி இரவில் படுத்துக்கொள்வதும் கூட! வயது அவருக்கு, நாற்பது நிற்கருகே வந்துவிட்ட போதிலும், வாலிப உணர்ச்சி மட்டும் மங்கியதாகக் காணோம். வருஷம் ஏற ஏற அது பொங்கிக் கொண்டே வந்தது. சினிமாக் கொட்டகைகளில் அவருக்கு தினம், 'சீட் ரிசர்வ்' பண்ணப் பட்டிருக்கும். காட்டியக் கச்சேரி, நாடகத்திலே எங்காவது என்றால், பாத காட்டியமாடும் பாவைக்குப் பக்கத்தில், முன் வரிசையில் அவளைப் பார்க்க லாம். உள்ளூர் 'சங்கீத அகடமிக்கு' அவர்தான் உதவித் தலைவர். அமர்த்தப்படுவது அதிகமாக, பாடகர்களல்ல, பாடகிகள்தான்! உற்சவாதி காலங்களில், பகவானுக்குப் பக்கத்தில் காலை மாலை இரு வேளைகளிலும் தரிசனம் கொடுக்கத் தவறமாட்டார். 'ஆள் அம்பு' அவரிடம் உண்டு.

"குமரு! அதோ..... குட்டி குரங்குறவென்று விழிக்கிறாள். இருக்குமா? முயற்சித்துப் பார்!" தனக்குப் பக்கத்தில் இருக்கும் குமாரசாமியைப் பார்த்து, கூட்டத்தில், சொல்லுவார்; காவால் அல்ல. விழிகளால்! குமரு, அவன்தான் அவருடைய ஆள். அவர் குறித்த குமரியைத் தொடர்வான் பணம் நிறையக் கிடைக்கும், அவனுக்கும், அவளுக்கும். பங்களா பாவசக் கோட்டமாகும்! இது மட்டுமல்ல. "கோமளமா? சியாமளாவா?....." குமரு, கேட்பான். அவர், எதாவது ஒன்றைப் பொறுக்கி எடுப்பார், குமரு குடுகுடுவென்று ஓடி, ஐயா வருகையை அந்த வீட்டில், அறிவிப்பான். அறிவிப்பைப் பெற்ற அந்த வீட்டில், நடைபெறும் பேச்சுக்களில் சிலவற்றைத்தான், முதலில் குறித்திருப்பது.

"பாலா இது? நீ பாதி குடித்துவிடு. உன் கையாலேப்ப, பாக்கியை என்னைப் பருகவிடு!"

"கோமளம்! அவ்வளவு பேருக்கெதிரே ஆடினாயே! எங்கே, என்னெதிரே ஆடு! ஆகட்டும். ம்ம்! ஆடும்போதே, பாடு! பாடிக் கொண்டே என் பக்கமாய் வந்து .....போ"

இவை, சிவலிங்கத்தின், சிருங்காரச் சித்தரிப்புக்கு இரண்டு உதாரணங்கள்.

(7-ம் பக்கம் பார்க்க)

பெருந்தவறு.

சரித்திர நிகழ்ச்சிகள் திரும்பத் திரும்ப வரும் (History repeats itself) என்பது ஆங்கிலப் பழமொழி. அதன் உண்மை அநுபவத்தில் காணப்பட்டது. காந்தியாரின் படுகொலை இதனை நாபகப்படுத்துகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் ரோமாபுரி எனாதிபத்யம் நிறுவி வெற்றி வீரரான ஜூலியஸ் ஸீஸர் வாளுக்கிரையாயினன். தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவின் நிகரற்ற ஜனாதிபதியாக இருந்து உலகுக்கு அரிய தொண்டாற்றிய அப்ரஹாம் லிங்கன் உயிர் குண்டினால் மாய்க்கப்பட்டது. சென்ற ஆண்டில் பர்மாவின் ஏக தலைவனாகிய ஆங்சான் பர்மிய ருக்குச் செய்த தொண்டின் பலன் துப்பாக்கிமுனையில் மாளநேர்ந்தது. அதே போலத்தான் இந்தியருக்கு அரிய தொண்டு செய்து உலக மதிப்பைப் பெற்ற காந்தியாரும் இன்று நிவால்வரால் சுடப்பட்டுள்ளார். ஒரு வீரன், தலைவன், கருணை வெள்ளம் நிறைந்திருந்தும், கோடிக்கணக்கான மக்களின் மனதை சுர்த்திருந்தும், ஒரு தனி மனிதன், ஒரு சிறு கூட்டம் விரும்பாவிடில் உயிரைப் பலிகொள்ளுவர் என்பது சரித்திரம் காட்டும் உண்மை. இதைத்தான் அறிஞர் பர்ணட்ஷாவும்; கல்லை மனிதனுக்கவிருப்பது எவ்வளவு அபாயகரமானது; என்றார். காந்தியாரின் தோழர் ராஜகோபாலாச்சாரியார் விலை மதிப்பில்லா மாணிக்கத்தை திருடன் கொண்டுபோய் விட்டான் என்கிறார். மாணிக்கம், விலை மதிப்பில்லாதது, ஒருவர் கையில் கிட்டின் வெளியிலே போட்டுவைப்பாரா? காந்தியார் விலையில்லா மாணிக்கமே. ஆனல் ஏற்ற பந்தோபஸ்தில் வைக்கப்பட வில்லை. உண்ணாவிரதம் முடிந்தவுடனே, அவருக்கும் தீவிரமான விரோதியுண்டு என்பதைக்காட்ட அறிகுறியாக குண்டு வீசப்பட்டதல்லவா? அன்றே சதிகாரக் கூட்டம் ஒன்று உண்டெனக் கண்டு மாணிக்கத்தை மறைத்து வைக்க வேண்டியது தலைவர்களின் கடமை. அவரின் கன்மைக்கும் இந்தியாவின் கன்மைக்குமாக அவரை 'சிறை'ப்படுத்தியிருக்கலாம், பிர்லா மாளிகையிலேயும்கூட! என்ன தவறு செய்திருந்தபோதிலும், காந்தியாரின் உயிரைமட்டில் கண்ணைபோல் பழிச்சொல்லுக்கு இடமின்றி பார்த்துக்கொண்டனர் பிரிட்டிஷார். வேற்றரசு செய்த அரிய காரியத்தை காந்தியாரின் சிடர்களால் நடத்தப்படும் அரசாங்கம் செய்யத் தவறியது பெருந்தவறையேயாகும்.

புகைச்சல் ... அங்கேயே!

"வேதாரணியம் ஸ்ரீ வேதரத்தினம் M. L. A; அவர்களின் வெளிவேஷம்" என்ற தலைப்பில் தஞ்சை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி மெம்பர் தோழர் தியாகராசன் வெளியிட்டுள்ள துண்டுத்தாளில்சில சுவையான பகுதிகள்.

உப்புச் சத்தியாக்கிரகத்தின் போது தங்கள் குடும்ப செல்வநிலை என்ன? இப்போது தாங்கள் பலலட்சக்கணக்கான பணம் சம்பாதித்ததற்கு சரியான கணக்கு கொடுக்க முடியுமா?

கள்ளமார்க்கெட்டில் உப்பு வியாபாரம் செய்வதற்கு இரண்டு கணக்குகள் வைத்திருப்பதாக மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வெளியாகியிருக்கிறதே, மத்திய சட்டசபை தீர்மானப்படி உப்பு நிர்ணய விலையைவிட அதிக விலைக்கு விற்றதுண்டா? அதைப் பற்றி வேதாரண்யம் நகர காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி பத்திரிகைகளில் அறிக்கை விட்டிருக்கிறாரே அதற்காக காரியதரிசியையும் அவருடைய பையனையும் குண்டர்களை ஏவி அடித்தது அநியாயமல்லவா? அதற்கு போலீசார் நடவடிக்கை எடுக்காமல் தடுத்ததுதங்கள் சூழ்ச்சிதானே?

உப்பு சத்யாக்கிரகஞாபகார்த்த கட்டிட நிதிக்காக உள் நாட்டிலும் வெளி நாடுகளிலும் பல ஆயிரக்கணக்கான பணங்களை வசூல் செய்தீர்களே? அந்தப் பணங்கள் எங்கே?

கோடியக்கரையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு புதிய போக்குவரத்து திட்டத்தில் மோட்டார் படகு ஓடுவதற்கு பல பேர்கள் அப்ளிகேஷன் கேட்டும் கிடைக்காமல் தங்களுக்கு மட்டும் கிடைத்திருப்பது தாங்கள் M. L. A. என்ற காரணத்தால் கிடைத்ததா?

தங்களின் தொகுதி தேத்தாகுடி விவசாயிகளுக்கு வடபாதிமங்கலம் ஸ்ரீமான் V. S. தியாகராஜ முதலியார் அவர்களின் பண்ணையால் ஏற்படும் அநீதி

(6-ம் பக்கம் பார்க்க)

மதவாதிகள் பாம்புக்கூட்டம்.

முரசொலி

திருவாரூர்.

பெரியார் ஆண்டு 69. எண் 22.

புதன் 4—2—48.

30-1-1948.

இந்திய உபகண்டத்தின் வரலாற்றில் இரத்தக்கரை படிந்த நாள், மக்கள் உகுத்த இரத்தக் கண்ணீர் அருவியென ஓடி அரபிக்கடலில் கலந்து.. வங்காளக் குடாக்கடலில் வழிந்தோட..... "காந்தி மாண்டார்ா"? என்ற கேள்விக்குமுன் கிளம்பிய பெரு மூச்சு இமயத்தை அசைக்க— இப்படி ஒரு சோக பூகம்பம் 30—1—48ல்!

திரு. காந்தியார் சுடப்பட்டார்! மும்முறை சுடப்பட்டார்! ஐயகோ! சுடப்பட்டார்! பிரார்த்தனைக்குத்தான் வந்தாராம்..... வேலும் வாளும் ஏந்தி 'வேற்றார் படை எங்கே' என்று அவர் அதட்டலாக கேட்ட நேரத்தில் அல்ல!..... அன்பு தவழும் மொழிகளில் பிரார்த்தனைக்கு மக்கள் வந்துவிட்டனரா என்று வினவிய நேரத்தில்..... சுடப்பட்டார்! கனல் கக்கும் கண்களோடு...கட்டாரியை எறிந்து காட்டானையைப் போல் எதிரியின்மேல் மோதிய வேளையில் அல்ல—கருணை பொங்கும் கண்களால் தன் உபதேசங்கேட்க வந்திருந்த மக்களைக் கண்டானந்தித்த வேளையில்.....சுடப்பட்டார்!

சுடப்பட்டார்.... சுடப்பட்டார்.....சுக்கு நூறாக்கப்பட்டார்!.....

30ந்தேதி மோகனப் புன்னகையார் மோகன்தாஸ் காந்தி!..... 31ந்தேதி..... அய்யய்யோ...முறித்தும் எரித்தும் போன எலும்புத் துண்டுகள்!.....ஒரு முட்டாள் வீசிய மூன்று குண்டுகள் முட்டுத் தனத்தையும்—வெளுத்த மதவெறியையும் போக்குவதற்கு முயன்ற ஒரு நியாகியின் வாழ்வை முடித்தன:

"ஏ! துப்பாக்கிக் குண்டே!.... அந்த தின்மார்க்கன் செய்த துரோக வேலைக்கு நீயும் துணையா?....எப்படித்தான்..... அன்னல் காந்தியின் அன்புகனியும் இருதயத்தைத் துளைத்தாயோ?".....என்று இந்தக் கண்டம் அழுகிறது. ஏன்... உலகமே அழுகிறது.

காந்தியாரின் உயிரை உறிஞ்சியவன் ஒரு பார்ப்பான். ஆம்...சாம்ராஜ்யங்களை சாய்த்த பாம்பரை! மன்னுதி மன்னர்களை மண்கவிழச்செய்த மரபு!... அந்த இனம் கக்கிய ஒரு தனி விஷம் காந்தியார் உயிரை சூறையாடிற்று. அந்த வைதிகம் வீசிய ஒரு வஞ்சகவாள் வார்தா உத்தமரின் வாழ்வை வெட்டிக் தள்ளிற்று. அந்த மதவெறி செய்த சதி.....ஒரு மாபெரும் வீரருக்கு மரணத்தீர்ப்பு வழங்கிற்று.

பெரியார் அவர்கள் 'தீர்க்கதரிசனம்' பேசல் சொன்னார்கள்; "காந்தியாரைக் கொன்றது மதமும், வைதிகமும்" என்று! மறுநாள் செய்தியாக வந்தது; காந்தியாரைக் கொன்றது ஒரு மராட்டிய பார்ப்பனன் என்று! மதத்திற்கு சவக்குழி வெட்டியவரல்ல காந்தியார்.....ஆனாலும் மரணம் அவருக்குப் பரிசாகக் கிடைத்தது.

இந்தியா கண்ணீர் விடுகிறது .....இந்த மகாசபை இனிப்பு வழங்குகிறதாம். ஆச்சரியப்படவில்லை நாம்! ஓமான் கடலில் சர். செல்வத்தின் வாழ்வு சிதைந்த போது சர்க்கரை வழங்கிய ஆரியக்கூட்டம் வாழ்கிற நாட்டிடத்தில் நாமும் வாழ்வதால்! காந்தியாரின் கொள்கைகளில் நமக்கு கருத்து வேற்றுமையுண்டு. ஆனால் நாம் கல் நெஞ்சக்காரர்களல்ல!..... காந்தியாரின் தியாகத்தையும்.....அவர் மேலான உழைப்பையும்...அவர் ஈகத்தையும்.....நாம் பாராட்டியவர்கள்!...அதே நேரத்தில் காந்தியாரின் தொண்டு பல பதவி வேட்டைக் காரர்களுக்கும்—பணியா—பார்ப்பனர்களுக்கும் பயன்படுகிறது என்றும் சொல்லத் தவறுதவர்கள்!.....

காந்தியார்-பெரியார் தொடர்பு வெறும்மின்னலல்ல!...சமீபத்து ராமசாமியையும், காகம்மாளையும் கேட்டுச் செய்யுங்கள் என்று தமிழ்நாட்டுக் காங்கிரசுக்கு காந்தியார் புத்தி சொல்லிய காலம் கூட ஒன்று இருந்தது. அந்தக் காலத்தை மலையேறச் செய்ததும் பார்ப்பனீயம். இன்று இந்த மாபெரும் சதியைச் செய்ததும் பார்ப்பனீயம்-அட! பாம்பினும் கொடிய பார்ப்பனீயமே!...காந்தியாரைப் பரந்தாமன் அவதாரம் என்று கூறியதும் நீதான்! .. அவரைப் பாடையில் ஏற்றியதும் நீதான். இது உனக்கு அடுக்குமா?....

எத்தனையோ சத்த வீரர்களை —சூரர்களை.....உன் சூழ்வலை வேக சூழ்ச்சியால் சுடுகாட்டில் தள்ளி மகிழ்ந்தாயே.....உன் கோரப்பசி.....சத்த சன்மார்க்கையும் சுவை பார்த்துத்தான் தணிவேன் என்றதா?...அநீதி! அநீதி!! பெருத்த அநீதி!!!

காந்தியாரே!..... தங்கள் உழைப்பின் பெரும் பகுதியைக் கூலியாகக் கொடுத்து.....இக் கண்டத்திற்கு ஓளவு விடுதலை வாங்கித் தந்தீரே!...விடுதலை... உண்மை விடுதலையாக மாறுவ தற்குமுன்—பட்டேலிசத் தர்பா ரும் பதவி வேட்டையும் ஒய்வ தற்கு முன்-தேசியத்தில் தெகிடு தத்தம் கலந்துவிட்டது என்று தாங்கள் எழுதி.....அந்த அறி வுரை ஆட்சியாளரை நல்வழிப் படுத்துவதற்கு முன், நாசத்திற் காளானீரே! .....

'சுதந்திரம்' கிடைத்த ஆறு வது மாதத்தில்...இந்த அகால சாக்காடா?.....அதுவும் தங்க ளுக்கா?...தாங்கள் என்ன..... மதவெறியை வளர்த்தீர்களா?.... அமைதியைக் குலைத்தீர்களா? அராஜகத்திற்கு காரண கர்த்தா வாயிருந்தீர்களா?...இல்லையே! ...பிறகேன் இந்தப் படுகொலை! மதவெறி! ..பதவி வெறி! பார்ப் பனீய வெறி! ....இதுதான் பதிலா?...ஆகஸ்டு 15.....துக்க நாள் என்றீரே பெரியார்..... அதை பட்டிலிசமும்—பார்ப் பனீய ஆட்சியும் மெய்ப்பித்ததை விட அதிகமாக மெயப்பித்து விட்டானே...ஒரு மதோன்மத் தன்! ..சுதந்திர இந்தியா' வில ...யாருக்காக பாடுபட்டீர்களோ அந்த சமுதாயத்தின் ஒரு மலைப் பாம்பால் விழுங்கப் பட்டீர்கள் என்பது... அவமானம்... வெட் கக்கேடு.....இந்த உபகண்டத் திற் கேற்பட்ட.....மாறுத இழிச்சொல்!.....

30-1-1948!..... ஆமாம்... வாலாற்றை வீணாக்கிய நாள்!

விற்பனையாளர்கள் கவனிக்க!

பட்டியல் கிடைத்த ஒரு வாரத்திற்குள் பணம் அனுப்பா விடில் பத்திரிகை அனுப்புவது நிறுத்தப்படும். நிர்வாகி.

தூக்கிலிடவேண்டும்.

(N. S. இளங்கோ)

நவநந்தர் ஆட்சியைக் கெடுக்க அலெக்ஸாண்டரை அழைத்து வந்த சாணக்கியன்

இளவல் பிரபுக்கு பிளாசி யுத் தத்திலே ஷுராஜ் உத்தௌலா வைகாட்டிக்கொடுத்த உமிச்சந்த்

போர்த்துகீசியருக்கு கள்ளிக் கோட்டையில் கைலாகு கொடு த்து வரவேற்பு வழங்கிய ஜமீன் தார் ஜாமோரின்

மலைக்கோட்டை மாவீரன் சிவாஜியின் மனக்கோட்டையைத் தூள்படுத்திய கங்குபட்டன்.

திருச்சி மீனாட்சியின் ஆட்சி ப்பெருமையை நாசமாக்கிய நாராயணன்.

தஞ்சை நாயக்கர் வம்சத்தை மைசூர் ராசர்களிடம் காட்டிக் கொடுக்க சதி செய்த கோவிந்த தீக்ஷிதர்.

தஞ்சை நாயக்க இளவர சன் செங்கமல தாசன் முடியை ப்பறித்து மாட்டிய வெங்காஜீ யின் காலடியில் வைத்த வெங்கண்ணு

திப்பு சுல்தானின் சாம்ராஜ் யதின் சரிவுக்கு நதி புரிந்த பூர்ணய்யா.

இவர்கள் மட்டுமல்ல.

பௌத்தரின் நளந்தா கலாசாலைக்கு நெருப்பு வைத்த வர்கள்;— விஜய சொக்கலிங் கன் ஆட்சிக் காலத்தில் அவர் களை வீழ்த்த நரிவேலை நடத்திய மூவர்—இவர்களுங்கூட உத்தம கோத்திரமான பிராமண கோத்திரத்தில் பிறந்தவர்கள் தான்.

இந்த துரோகிகளின் பொம் மைகள் விடுதலை விழாவன்று தூக்கிலிடப்படும் காட்சி நடத் தப்பட்டிருக்கவேண்டும்.

ஆனால் அவர்கள் மார்பிலே தவண்ட பூணூல் கயிறு தூக்

காந்தியார் ... ... கொலைக்குமுன்

117 "மசூதிகள் இந்துக்கள் குடியிருக்கும் வீடாக மாற்றப் பட்டிருக்கின்றனவென்று காந் தியார் கூறியிருப்பதை உங்களா ல் பொய்யென்று கூறமுடியுமா? அவர் "சாகப்போகிற மனிதர்" சாகும்போது கூறும் மரண வாக்குமூலம் அதென்று ஞாபக மிருக்கட்டும். மரணவாக்குமூலத் திற்கு எவ்வளவு மதிப்புக் கொடுக்கவேண்டுமோ அவ்வளவு மரியாதை கொடுக்கவேண்டும், அவருடைய அந்த வாக்குக ளுக்கு.

18-1-48 வில்லிவாக்கத்தில் பெரியார் இப்படிப் பேசினார்.

"எம்ப்பா, மழையில்லாத போது வருணஜபம் செய்தார்க ளே....அப்பொழுது மழை பெய் யாமல் பிறகு இரண்டு மாதம் கழித்து மழை கொட்டுச்சே— அது ஏன்?!!

"அதுவா.... பூலோகத்திலிருந் து செய்த ஜெபம் வருண லோக த்துக்கு எட்ட அவ்வளவு நாட் களாயிற்று போலும். ['எழில்']

— பாரதி தாசன் —

குயில் கவிதை இதழ். மாத வெளியீடு

கவிஞரின் தேனூறும் கவிதைகள்

இனிய உரை நடைகள்!

இளம எழுத்தாளர்க்கு ——

—— இலக்கியப் போட்டிப்பரிசு

இன்ன பிற சுவை மிகு பகுதிகள் உண்டு. விலை 6 அணா.

குயில், பாரதிதாசன் பதிப்பகம்

புதுச்சேரி.

குக் கயிறைவிட பலம் பொருந் தியது— ஆகவே விடுதலை விழா வில் இந்த வைபவம் நடைபெற வில்லை.

வெற்றி எட்டுத்திக்குமெட்ட கோட்டு முரசே!

முரசொலி.....! முரசொலி.....! முரசொலி.....!

அரசனென்றும் ஆண்டியென்றும் அவதியுறுமக்களை
அல்லல் நீக்கி ஒன்றுசேர்க்க ஆர்த்தெழுந்தே முரசொலி! [மு]

மேலுலக வாழ்வுயென்றும் மோக்ஷமென்றும் கம்பியே
கீழ்நிலையில் வீழ்ந்துநாமும் கெட்டுவிட்ட தன்மையில்
வாழுகின்றோம் முன்றுகோடி மக்களிந்த தமிழர்கள்
ஆள்வதற்கோ உரிமையில்லை அவநிலையைப் போக்கிட [மு]

கூழுமின்றி மக்களெல்லாம் தலையழிந்த நாளிலும்
ஆள்சுமக்க ஆறுவேளை அன்னமுண்ணும் சாதிகள்
பாழ்படுத்தி மக்கள் தம்மைப் பாதவிக்கச் செய்தமே
வாழ்ந்திநக்தம் நிலைதகர்ந்து மாய்ந்தொழியச் சொல்லியே [மு]

கா. மு. ஷெரீப்.

முரசொலி உண்மைத் திராவி
டனின் இருதய ஒலியாக இருக்
குமென நான் கம்புகிறேன்.

புலவர் மணியம்.

ஆசையோடு எதிர் பார்த்த
முரசொலி என் எண்ணப்படி
வெற்றி முரசொலியாக வெளி
வந்துள்ளது. முரசொலியின்
முன்னேற்றத்தை என் கடமை
யாகக் கொண்டேன்.

K. S. பிச்சையப்பா,
வித்துவான் குளிக்கரை.

முரசொலி முழக்கம் திராவி
டரின் முன்னேற்ற முழக்க
மாகுக.

புலவர் குழந்தையா.

(முகைச்சல் 3-ம் பக்கத்தொடர்ச்சி)

கனை தங்களிடம் வந்து எழை
கள் முறையிட்டதற்கு தாங்கள்
பொறுப்பை உணராது எழை
விவசாயிகளை பயமுறுத்தி முத
லாளியிடம் சரணடைய வேண்டு
மென்று சொன்னது அநீதி
தானே?

பிரசித்திபெற்ற ஆகஸ்டு போ
ராட்டத்தில்லிட்டிலிருந்தாலும்,
வழியர்கள் வந்து தாண்டுவார்க
ளென்று பயந்து உப்பளத்தி
லேயே இருந்துகொண்டு பல
லட்சக்கணக்கான பணங்களை ..
.....இனிமேல் வெளிவேலை
திலும் மேடைப் பிரசாரத்திலும்
எல்லோரையும் எமாற்ற நினைப்
பது முடியாது.....

—தியாகராஜன்,
தஞ்சைஜில்லா காங்கிரஸ்
கமிட்டி மெம்பர்

திரிஷிடப்பிரிவினை வெற்றியா
கும் வரையில் "முரசொலி"
முழங்கவேண்டு மென்பது
என் ஆசை

பொன்னி ஆசிரியர்,
முத்து சுப்பிரமணியன்.

முரசொலி திராவிடத்தின்
தீவிரத்தைத் திராட்டி ஒலிக்கட்
டும். அஞ்சாமை அதன் முதற்
பண்பாகட்டும்.

சு. மன்னர் மன்னன்.

புதிய—ஆரல் தொல்லை
களை நிறைந்த பொறுப்பை மகிழ்
வுடன் தாங்கும் தங்கட்கு என்
வாழ்த்து.

அரங்கண்ணல்.

முகாம்: சென்னை.

எப்பொழுது கங்கை கொண்
டசோழன் வம்சத்தாரின் முர
சின் பேரொலியைக் கேட்போம்;
எப்போது வீரமகள் கண்ணகி
யின் சிலைக்கு இமயத்தில் கல்
எடுத்த சேரன் செங்குட்டுவன்
சந்ததி வெற்றிமுரசு அடிப்ப
தைக் காண்போம், என்ற நிலை
யில் இருந்த எனக்கு பேச்சா
லும், எழுத்தாலும், நாடக நடிப்
பாலும் நாட்டுக்குத் தொண்டு
செய்து பகுத்தறிவைப் பரப்பு
கிற வீரதமிழ இளைஞர் மு. கரு
ணாநிதி அவர்கள் 'முரசொலி'
முழங்கி பத்திரிகையாலும் பணி
புரிய வந்துள்ளார், என்பது
கேட்டு மகிழ்ச்சி பொங்காம
லிருக்குமா? நாட்டிலே பண
முண்டு, பணிசெய்ய மனமில்லை,
வாய்ப்பேச்சு உண்டு, முயற்சி
இல்லை: உணர்ச்சியுண்டு ஊக்க
மில்லை. கூட்டமுண்டு, கூட்டுறவு
இல்லை. இந்நிலையில் முரசொலி
வெளிவருகிறது. இந்நிலை மாற
'ஒலி'திக்கெட்டும் முழுகட்டுமே!

மூவலூர்
ஆ. ராமாமிர்தத்தம்மாள்.

அடிமை நிலை பரர்க்கும்!—
எதற்கும் அச்சம் இல்லை! நல்ல
குடிமை நிலைக்கும் என்று—
முரசே! குமுறிக் குமுறி முழங்கு!

"அறம்"

(3-ம் பக்க தொடர்ச்சி)

கட்டிலறை வீரர் அவர் போகப்பூனை!' காமக்காட்டானே அந்த மனிதமாடு!

மாலே! அவர் பங்களா கூட்டும் கிழவி அன்று வரவில்லை. ஜுரம் அவளுக்கு. அவள் மகள் வந்திருந்தாள். அழுக்கான ஓடைதான் அவள் உடுத்தியிருந்தது. காதில் 'கம்மல்' இல்லை, தக்கை போட்டிருந்தாள்! கழுத்தில் கட்டித் தங்கத்தால் செய்த அட்டிகை இல்லை, கயறு கிடந்தது! கையில், வர்ணம் மங்கிய வளையல் போட்டிருந்தாள். பௌர்ணமி நிலவைப்போல் இருந்தது அவள் நெற்றியில் இட்டிருந்த பொட்டு! நகை அணியா நங்கை அவள். அதுதான் அவள் அழகை மிகைப்படுத்தியது எனலாம். நேர்வகிடு எடுத்துச் சீவி, கொண்டை போட்டிருந்தாள், அந்த நேரிழையாள். கெண்டை விழிகள் அவளுக்கு.

சிவலிங்கத்தின் கண்ணோட்டம் அந்தச் சிங்காரியின் மீது தங்கிற்று குமரைப் பார்த்து அவர் குறுநகை புரிந்தார். குமரு, அவளைப் பார்த்துப் புன்னகை புரிந்தான். எண்ணம், மொக்கு. புன்னகை, மலர்! மலரில் மணம் இருக்கிறதல்லவா, அதுபோல் புன்னகையில் பொருள் புதைந்து கிடக்கும். வேலைக்காரியின் மகளுக்கு சிவலிங்கத்தினிடமிருந்து சிந்திய புன்னகையின் பொருள் புரியவில்லை. புரிந்துகொள்ள அவள் முயலவும் இல்லை.

"இந்தா! பொண்ணு! கிழவி எங்கே? உன் பேரென்ன? நீ யாரு?" குமரு கேட்டான்.

"கிழவி என் அம்மாங்க. காயலா. அதான் என்னை அனுப்பிச்சாங்க கூட்ட.' என்பேர் சொர்ணம்!" சொர்ணம் சொன்னாள்.

"சரி சரி! மேல்மாடியில் உள்ள அறையை மட்டும் கூட்டினால் போதும். போயி கூட்டு!" குமரு, இப்படிக் கட்டளையிட்டுக் கொண்டே, சிவலிங்கத்தைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டி விட்டு, சொர்ணத்தை அழைத்துக்கொண்டு, அறையைக் காட்ட மாடிக்குச்சென்றான்.

அறையை அவள் கூட்டிக் கொண்டிருந்தாள். திடீரெனக் கதவுகள் சாத்தப்பட்டன 'திக் திக்' என்று அடித்துக்கொண்டது அவள் மார்பு. திகைத்தாள். பேச முடியவில்லை! நெற்றியில், குப்பென்று வியர்த்துவிட்டது. மின்சார விளக்கு ஏற்றப்பட்டது!

சிவலிங்கம் அறையில் சிரித்த முகத்துடன் நின்றுகொண்டிருந்தார்!

சிரித்தார்! சிரித்தார்! சிரித்தார்! கற்கண்டை வாயில் போட்டதும், கணகோரத்தில் கடித்துப் பொடியாக்கி, உமிழ்நீரில் கலந்து உள்ளே செலுத்த, குறுகுறுவென்று கடக்கும் சிறுபிள்ளை விரும்பாதல்லவா! சிறிது சிறிதாக, ஈரவால் சுவைத்துக் கரைத்து, விழுங்கத்தானே விரும்புகிறது! சிவலிங்கம் சிறு பிள்ளையாரா! கற்கண்டாளா, அவள்!

வேலைக்காரியின் வேல் விழிகளினிருந்து நீர் வழிந்தது!

கட்டிலில் கண்ணீருங் கம்பலையுமாகக் கிடந்த அவளிடம் கடைசியாக—பத்து ரூபாய் நோட்டை வைத்து அழுத்தினார். நோட்டை வாங்கி, அவர் முகத்தில் வீசி எறிந்துவிட்டு, சொர்ணம் மாடியைவிட்டு இறங்கினாள். பேசவில்லை! ஆம்! அவளால் பேச முடியவில்லை!!

பாதையில் இருள் படர்ந்திருந்தது. சொர்ணம், விழிகள் நீர் சொரிய வீட்டை நோக்கி நடந்துகொண்டிருந்தாள். போகும் பாதையில் போவார் வருவார் ஒருவருமே இல்லை. அவள் போய்க் கொண்டிருந்தாள்.

"ல்லாயிருக்கய்யா, போக்கிதை சி, விடு, கையை!" சொர்ணம் அலறினாள்.

"பத்தினித் தங்கமே! சத்தம் போடாதே நான் தொட்டா உன் மேனி நெருங்குதா? பங்களாக்காரர் கைப்பட்டப்போ... நான் சொல்றபடி கேளு!" குமரு இப்படிக் கூறினான். கையை, அவள் கழுத்தில் போட்டான். "ஐயோ!" அவன் அலறினான்.

"அடிக்காதே! ஐயோ! அடிக்காதே! ஐயோ!" குமரு, வலி பொறுக்க முடியாமல் கூச்சலிட்டான். தற்செயலாக வந்த, சொர்ணத்தின் புருஷன், நிலைமையைக் கண்டு, குமரைத் தாக்கினான். குமரு, பங்களாவில் சொர்ணம் சிக்கிச் சீரழிந்ததைக் கூறினான். சொக்கன் அடிப்பதை நிறுத்தினான். அவன் பார்வை சொர்ணத்தின்மீது திரும்பிற்று. சொர்ணம், விம்மினாள். குமரு, நழுவி விட்டான்!

ஐயோ! நான் என்ன பண்ணுவேனுங்க? பாவி என்னைக் கெடுத்திட்டான்.....' சொர்ணம் முறையிட்டாள்.

"சீ! கழுதே! என் முன்னே நிக்காதே! என் முகத்திலே முழிக்காதே! ஓடிப்போ, ஊரு பக்கம் தலையைக் காட்டாதே! ஓடு! கழுதே!"

சொக்கன், ஆத்திரத்தில், சொர்ணத்தைக் காலால் உதைத்து, இப்படிச் சொல்லிவிட்டு, விடு விடு என்ற வீட்டுக்கு குடிசைக்குப்—போய்விட்டான். பாதையில், பாவை கிடந்தாள். எழுந்தாள்.

(8-ம் பக்கம் பார்க்க)

(கட்டிலறை 7-ம் பக்கத்தொடர்ச்சி)

அன்று இரவு! சொக்கன், வீட்டில், தீட்டி வைத்திருந்த அரிவாளை திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டிருந்தான்;

சிவலிங்கம், பங்களாவில் களிப்புக்கடலில் ஆழ்ந்தான்!

"சொர்ணப்! கைகாரி நீ. சாயந்திரமா அழுதே. இப்ப நீயே திரும்பிட்டே: இந்தா பால்! குடி. போகப்போகத் தெரியும் .....என் அருமை!"

"கைவிடமாட்டிங்களே? எப்போதும் என்னைக் காப்பாத்து வீங்களா?"

"ஹச்சி! பைத்யப்! கிட்டவா ஆசைகாட்டி மோசம் செய்ய மாட்டேன். இந்தா ஆஞ்ச! சாப்பிடு!!"

சொர்ணத்திடன், சிவலிங்கம் கொஞ்சிக் கொண்டிருந்தார் அதே இரவில், பங்களாவில். கோடைக்கு, ஒருமுறை குற்றாலத்துக்குப் போய்விட்டு வந்தவர்கள் மீண்டும் மீண்டும் கோடைக்கு அங்கே போகத் துடிப்பார்களாமே. அதுபோல், இந்தச் சொர்ணம், இந்த இரவே வந்துவிட்டாள், மீண்டுப்! என்று எண்ணிக் கொண்டிருந்தார் சிவலிங்கம். கன்னத்தைக் கிள்ளினர். கூந்தலைக் கோதினர். அவள் சிரித்தாள்!

கடிகாரம் டிக்! டிக்! என்று அடித்துக் கொண்டிருந்தது! டண்! டண்! டண்! டண்; மணி நாலு!!!! டிக்! டிக்! டிக்!..... கடிகாரம் மட்டும் ஓசை கிளப்பிக் கொண்டிருந்தது. சிவலிங்கம் அப்போதுதான் கண்ணை மூடினார், அரைமணி ஆயிற்று. குறட்டைவிட்டுக் கொண்டிருந்தார். சொர்ணம், பக்கத்தில் படுத்திருந்தாள். இமைகளே மூடி அறியாள்.

"ச்! ச்! ச்!" பல்லி ஒன்று சத்தமிட்டது!

நாக்கைப் பிடுங்கிக்கொள்!

● "ஆரியர் பதம் பணியும் சிரிய தவத்தினை ஆரியர் பணித்த வாறு ஆண்டுதோறும் செய்குவாய்"

● "பண்டையிலிருந்தே அந்தணர் சிறந்த ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வருகின்றனர். மேலும் தம் அறிவிலும் எல்லோரையும்விட முன்னே நிற்கின்றனர்"

● "அந்தணர் வாழ்க! அறமுறை வாழ்க! ஆரியநாடு வாழ்க என்றும் வாழ்க! வீழ்க அந்தணர் வேஷங்கள்."

● "ஜாதி, மதம், அவசியமா?" என்ற கேள்விக்குப்பதில் பலமாக இருப்பினும், தேவி என்ற வாதமே வெற்றி பெறும்."

● "குத்திரனைப் பற்றிப் பாட்டெழுதி தெருத் தெருவாகப் பாட முடியாதா."

பிராமணரும் தமிழர்தான் என்று முரசுகொட்டும் தேசியத் தோழா!....மேலே தீட்டியவை அந்தணர் பத்திரிகையின் வாசகங்கள்.

நாக்கைப் பிடுங்கிக்கொள்வதைத் தவிர உனக்கு வேறு வழி ஏது அண்ணே!

சிவலிங்கம் துடித்தார்! துடித்தார்! தொண்டையை இரண்டு கைகள் நெருக்கின. துடித்தார்! தவண்டினிட்டார்.

காலை மணி எட்டு! பங்களாவில், அவர் படுக்கையில், அவர் மட்டும் கிடந்தார், சொர்ணம் இல்லை! காலைந்து பேர் அவரை எழுப்பினர்கள். அவர் எழுந்திருக்கவில்லை! அவர் வாய் வழியே, இரத்தம் வெளிவந்து காய்ந்திருந்தது! ஆம்! கட்டிலறை விரர் 'களத்திலேயே' மாண்டுகிடந்தார்.

குடந்தையில் — தூக்குமேடை. —

முரசொலி வளர்ச்சிக்கென முரசொலி நாடக மன்றத்தாரால் குடந்தை தேவிநாடக சபையில் 2—2—48 மாலை 6.30க்கு தோழர் V. சின்னதம்பி அவர்கள் தலைமையில் தூக்குமேடை நாடகம் நடைபெற்றது. தோழர்கள் மு. கருணாநிதி, N. S. இளங்கோ, புலவர் குழந்தையா. N. S. சண்முகவடிவேல், கருணை. எம். ஜமால், க. சுந்தரன், சி. டி. மூர்த்தி, சீனிவாசன், சு. இராமமூர்த்தி, சுப்பிரமணியன், குருசாமி, ஜீவன், P. S. சிவம், கெடுமோறன், A. மருதகாசி தோழியர் K. V. ராஜம், மற்றும் பலர் நடித்தார்கள். சிலவர் நடிகர்களைப் பாராட்டிப்பேசினர். தோழர் S. K. சாமி தொடர்ந்து சொற்பொழிவாற்றினர். காந்தை தோழர் A.K. வேலன் நடிகர்களுக்கு மாலைகள் அணிவித்தார். வசூலான ரூபாய் 847 கொண்ட பண முடிப்பை தோழர் N. S. இளங்கோ முரசொலி நாடக மன்ற சார்பில் தோழர் மு. கருணாநிதியிடம் அளித்தார். நடிப்பதற்கு முன்வந்த தோழர்களுக்கும், நாடகத்திற்கு வாடகைக்கு தியேட்டர் தந்து உதவிய தேவி நாடகசபா உரிமையாளர் தோழர் K. N. சொத்தினம் அவர்களுக்கும், நாடக ஏற்பாடுகளை நடத்திக்கொடுத்த தோழர் சோமுலு அவர்களுக்கும் நன்றி கூற, நாடக நிகழ்ச்சி முடிவுற்றது.

எழுந்தில்லை அதே ஒலியில்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்:
மு. கருணாநிதி, திருவாரூர்.
அச்சிடுபவர்: கருணை. எம். ஜமால்
கருணாநிதி (மின்னியக்க)
அச்சகம், விஜயபுரம்.